2003 மே 9]

(ஆ) அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம்

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள்—ஆசிரியர்கள் போராட்டம் கடுமையாகிக் கொண்டிருக்கிறது...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்றே சொல்லிவிட்டீர்கள். விட்டுவிடுங்கள்.*

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2003 ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*